# சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி

## OS. No.175/2022

**18.08.2025**

## P.W.2- தேவி

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

10ல் 2 சொத்திற்கு பங்கு கேட்டு வழக்கு போட்டுள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண் மற்றும் நான்கு மால் தெரியாது. தாவா சொத்து எனது தாத்தாவின் பூர்வீக சொத்தாகும். எனது தாத்தாவின் அப்பா பெயர் தெரியாது. எனது தாத்தாவின் அப்பா பெயரில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனது தாத்தாவின் அப்பா சொத்தாக இருந்தால் தான் பூர்வீக சொத்தாக கருத முடியும் என்றாலும், தாத்தா சொத்தை பூர்வீக சொத்தாக கருத இயலாது என்றால் சரியல்ல. நான் தாத்தா பெயரில் தான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு பிச்சைத்தேவர் மற்றும் கருத்தக்கண்ணன் என இரண்டு பிள்ளைகள் என்றால் சரிதான். எனது அப்பா பெயர் கருத்தக்கண்ணன் ஆகும். எனது தாத்தா உயிருடன் இருக்கும்போது எனது அப்பா மற்றும் அவரது சகோதரர் சொத்துக்களை பிரித்தார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு பாகம் பிரித்தபோது எனது தாத்தா ஒரு பாக சொத்தை வைத்துக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது அப்பா, 5ம் பிரதிவாதி தேனம்மாளுக்கு 1 ஏக்கர் 77 சென்டு நிலத்தினை 2002ல் கிரையம் கொடுத்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சொத்தை தேனம்மாள் அனுபவம் செய்து தனது குடும்பத்துடன் 2010ல் பாகப்பத்திரம் செய்து கொண்டார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு மேற்படி சொத்தை பாகம் பிரித்தில் தேனம்மாளின் மகன்கள் இருவருக்கும் சொத்து பிரித்து தரப்பட்டது என்றால் எனக்கு தெரியாது, மேற்படி தேனம்மாளின் மகன்கள் இருவரையும் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அவர்களை வழக்கில் சேர்க்காததால் எனது வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனது அப்பா, எனது பெரியப்பா பிச்சைத்தேவருக்கு 1991ல் தாவா சொத்தில் 15 சென்டை கிரையம் கொடுத்தார் என்றால் தெரியாது. கிரையம் வாங்கிய சொத்தை 4, 5 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்களா

என்றால் அனுபவம் செய்து வருகிறார்கள். 1991 மற்றும் 2002ல் கிரையம் செய்து அதனடிப்படையில் 4, 5 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வந்த நிலையில் ஏன் பாகம் கேட்கவில்லை என்றால் எனது அப்பா ஒத்தி வைத்ததாக நினைத்தோம். நான் ஒத்தி பத்திரம் எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கில் ஒத்தியாக அனுபவம் செய்வதாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனக்கு தற்போது 45 வயதாகிறது. 1991ல் எனக்கு 11 வயதிருக்கும். எனது அப்பா கிரையம் கொடுத்தது செல்லாது என எனக்கு 18 வயது நிறைவடைந்த 3 ஆண்டுகளுக்குள் வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்பதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 12 வருட கால தாமதமாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனது தந்தை 4, 5 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துவிட்டதால் தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் எனது தந்தை கிரையம் கொடுத்தது எனக்கு தெரியாது. எனது தகப்பனாருக்கு கிரையம் கொடுக்க உரிமையில்லை. 4, 5 பிரதிவாதிகள் பெயரிலுள்ள கிரையப்பத்திரம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோராததால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனது தாத்தாவிற்கு சுயார்ஜித சொத்து என தெரிந்தும், அதை எனது தந்தை பல வருடங்களுக்கு முன்பு விற்று அதை கிரையம் வாங்கியவர்கள் அனுபவம் செய்து வருவதை தெரிந்து கொண்டு தற்போது பணம் பறிப்பதற்காக எதுவும் தெரியாது என வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.08.18 16:29:57 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.